**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 85 of 2026**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: தனலட்சுமி** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.17.06.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.01.2026 ம் தேதி நான் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் நிலைய பொறுப்பில் இருந்த போது காவல் ஆய்வாளரின் உத்தவின் படி, தலைமை காவலர் 501 ராமன், முதல் நிலை காவலர் 1240 சண்முக சுந்தரம் ஆகியோருடன் மது வேட்டை ரோந்து அலுவலாக இலால்குடி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்தோம். எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பிரேம்குமார் த/பெ, சின்னதுரை மாரியம்மன் கோவில் தெரு, 7/31, திருமண மேடு, லால்குடி தாலுக்கா, திருச்சி என்பவர் வீட்டின் அருகில் அரசு அனுமதியின்றி 180 ML அளவுள்ள Old chef Brandy-26 பாட்டில்கள் வைத்திருந்தவர் போலீசாரை கண்டதும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து விசாரிக்க அரசு மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லரையில் விற்பனை செய்ய தன் வசம்

வைத்திருந்தவரை குற்ற காரணம் கூறி 08.30 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பின்பு எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்துகளை பொது மக்கள் யாரும் சாட்சியாக வராததால் என்னுடன் வந்த போலீசார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 08.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் மேல் அதிகரிகளின் உத்தரவுப்படி கைப்பற்றப்பட்ட மதுபானத்தை சம்பவ இடத்திலேயே 09.00 மணி அளவில் அழித்தல் மகஜர் மூலம் கீழே கொட்டி அழிக்கப்பட்டு, அந்த மகஜர்களில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரியுடன் நிலையம் வந்து 10.30 மணிக்கு எதிரி மீது குற்ற எண். 32/2026 U/s. 4(1)(C)–TNP (Amendment)Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7/அ.சா.3** ஆகும். பின்னர் எதிரியை தக்க இரு நபர் ஜாமீனில் விடுவித்தேன். பட்டிகள் சாட்சிகளான 1, 2 ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரி மீது 4(1)(C) TNP (Amendment) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)**

நான் அழித்தல் மகஜர் மற்றும் கைபற்றுதல் மகஜரில் சாட்சிகளிடம் சம்ப இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். அழித்தல் மகஜர் மற்றும் கைபற்றுதல் மகஜரில் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பபட்டதா என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையால் எழுதிவிட்டு பின்னர் நிலையம் வந்து தட்டச்சு செய்யப்பட்டது. சம்பவ இடத்தில் ஒரு முறையும் காவல் நிலையத்தில் ஒரு முறையும்

சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை அழிப்பதற்காக எந்த உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றேன் என குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் வேதியல் பகுப்பாய்விக்கு அனுப்பப்படவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இந்த வழக்கு புள்ளியல் கணக்கிற்காக எதிரி மீது போடபட்ட பொய்யான வழக்கு என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/−சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.17 17:50:32 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி